சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை – 08

ந.க.எண் 3492 /அ5 / 2023 நாள் 8.05.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச்/ஏப்ரல் 2023 - மதிப் பெண் பட்டியலை (Statement of Mark ) மாணவர்களுக்கு விநியோகித்தல்- தொடர்பாக |
| பார்வை | சென்னை – 06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 023720/சி1/2023 நாள் 8.05.2023 |

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் இத்துடன் இணைத்து அனைத்து வகைப் பள்ளித்தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு அனுப்பப்படுகிறது. மார்ச் / ஏப்ரல் 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வுகளின் தேர்வு முடிவுகள் 08.05.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது,

12.05.2023 முற்பகல் 11.00மணி முதல் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலை பள்ளித்தலைமையாசிரியர் தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட User Id மற்றும் Pass word பயன் படுத்தி பள்ளி மாணவர்களுக்கும் தனித்தேர்வர் தேர்வு மைய பள்ளித்தலைமையாசிரியர்கள் தமது மையத்தில் தேர்வெழுதிய தனித்தேர்வர்களுக்கும் உரிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks ) பதிவிறக்கம் செய்து அச்சான்றிதழ்களில் உள்ள விவரங்களைச் சரிபார்த்து தலைமையாசிரியர் / முதல்வர்களின் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டு தயாராக வைத்துக் கொள்ளவேண்டும்,

மதிப்பெண் பட்டியலை (Statement of Marks ) 12.05.2023 முதல் பள்ளித் தேர்வர்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகளிலும் / தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுதிய தேர்வு மையம் மூலமாகம் விநியோகம் செய்யப்பட வேண்டும் என அனைத்து தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

இணைப்பு அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம்

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் சென்னை மாவட்டம்

நகல்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் ( இடைநிலை)( தனியார்பள்ளிகள்) (தொடக்கக்கல்வி) சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

Scanned with OKEN Scanner